**ஹோமகம பிரதேச சபை**
**கொழும்பு மாவட்டம்**

-------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 08 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பாக்கிய அறிக்கை 2019 யூன் 01 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஆகஸ்ட் 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஹோமகம பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | 2018 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட ரூபா 18,823,916 பெறுமதியான 03 கட்டிடங்களின் கிரயம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப் படுதல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் மூலதனமாக்குவேன். |
| (ii) | 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட ரூபா 7,539,576 மொத்தப் பெறுமதியான இயந்திரங்களும் உபகரணங்களும் மோட்டார் வாகனங்களும் வண்டில்களும் தளபாடங்களும் பொருத்திகளும் என்பவற்றில் நிகழ்கால உள்ளமையை உறுதிப்படுத்திக் | சொத்துக்களின் நிகழ்கால பௌதீக உள்ளமையினை உறுதிப்படுத்தி ஏனைய சொத்துக்களின் பெறுமதிகள் அகற்றப்படுதல் வேண்டும். | தற்பொழுது பௌதீக ரீதியாக இல்லாத ஏல விற்பனையின் மூலம் அகற்றப்பட்ட பொருட்களின் பெறுமதியை நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து அகற்றுவேன். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்ளாது நிலையான சொத்துக்களின் மீதியில் உட்ளடக்கப்பட்டிருந்தன. | | |
| (iii) | மீகொட பொருளாதார நிலையத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் நிதியத்திடமிருந்து பெறவேண்டிய ரூபா 69,300,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். | அடுத்த இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது மேற்கூறிய நிலுவையை கடன்பட்டோராக உள்ளடக்குவேன். |
| (iv) | 2017 ஆம் ஆண்டின் போது பெற்றுக் கொள்ளப்பட்ட உடல் மேம்பாட்டு உபகரணங்களுக்காகச் செலுத்த வேண்டிய ரூபா 9,706,300 தொகைக்காக கடன்கொடுத்தோருக்காக ஏற்பாடு செய்யப்பட்டிக்க வில்லை. | செலுத்த வேண்டிய செலவுகளுக்காக ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். | மாகாண சபையிடமிருந்து பணம் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் நடைமுறை ஆண்டின் போது செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (v) | பௌதீக ரீதியாக இல்லாத ரூபா 22,595,256 பெறுமதியான களஞ்சிய பொருட்கள் களஞ்சிய இருப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டின் இறுதியில் உள்ளவாறான பௌதீக இருப்பு மீதி பெறுமதியிடப்பட்டு கணக்குகளில் காட்டப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் இறுதிக் கணக்குகளுடன் சரியான இருப்பு, செம்மையாக்கல் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு குறித்துக் கொள்கின்றேன். |
| (vi) | மீளாய்வாண்டின் போது கைதவிர்ப்புச் செய்யப்பட்ட கணக்குப் பெறுமதி ரூபா 214,142 தொகையான பொருட்களின் கிரயத்தை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொருட்களின் கொள்விலையை இனங்கண்டு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்பொழுது இடம்பெற்று வருகின்ற மதிப்பீட்டிற்காக அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் இனங்காண்பதற்கு முடியாதுள்ள உரிய ஏலவிற்பனைப் பொருட்களின் பெறுமதியை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (vii) | 2015 மார்ச் 25 ஆந் திகதி சபைக் காணியில் அமைந்துள்ள ஆவணமாக்கல் கட்டிடம் தீப்பிடித்ததனால் ஏற்பட்ட நட்டம் ரூபா 2,117,441 | அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தப் படுதல் வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வில்லை என்பதனை ஏற்றுக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் |

| | | | |
|---|---|---|---|
| | ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் அது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கின்றேன். |
| (viii) | கைவிடப்பட்ட 03 தொழிற்சாலைகளுக்காக ரூபா 790,000 தொகையான கடன்கொடுத்தோருக்கு நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | கணக்குகள் சரி செய்யப்படுதல் வேண்டும். | பொதுமக்களின் வேண்டுகோள்களைக் கவனத்தில் கொண்டு கௌரவ தலைவரின் ஆலோசனையின் பேரில் கிரவல் செயற்திட்டத்தை முழுமையாக காபட் இடுவது அவசியமானது என்பதனால் இரத்துச் செய்யப்பட்டது. |
| (ix) | விற்பனைக் கடைகள் மற்றும் விற்பனை நிலையங்களிலிருந்து குப்பைகளைச் சேகரிப்பதற்காக 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 125,597 தொகை கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு கருது கோள்களுக்கு இணங்க அறவிடப்பட வேண்டிய பணத்தை கடன்பட்டோராக கணக்கீடு செய்தல் வேண்டும். | அடுத்துவரும் ஆண்டின் போது இத்தகவல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) நிகழத்தக்க பொறுப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வெளித்தரப்பினர்களால் சபைக்கு எதிராக தொடுக்கப்பட்ட ரூபா 11,000,000 பெறுமதியான 09 வழக்குகள் சம்பந்தமாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிகழத்தக்க பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் படுதல் வேண்டும். | எதிர்காலத்தில் அத்தகவல்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) கணக்கிணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 கணக்கு விடயங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிக்கும் ஆவணங்களின் | உரிய மீதிகளின் வித்தியாசத்திற்காக கணக்குகளை | 2019 இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது நாட்குறிப்புக்கள் மூலம் |

| | | |
|---|---|---|
| பிரகாரமான மீதிக்குமிடையே ரூபா 14,254,205 வித்தியாசம் காணப்பட்டது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஈ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீகொட பொருளாதார மத்திய நிலையத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக்கு ரூபா 300,000 வருடாந்த குத்தகைக்கு ஒப்படைக்கப்பட்ட 01 ஏக்கர் 02 ரூட் 10 பேர்ச்சர்ஸ் அளவுள்ள காணிக்காக 2013 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 900,000 தொகையான புதிய மதிப்பீட்டுப் பணம் கிடைக்காமையின் காரணமாக2014, 2015, 2016, 2017, 2018 ஆகிய ஆண்டுகளுக்காக கிடைக்க வேண்டிய நிலுவை குத்தகைப் பணமும் தண்டப்பணமும் ரூபா 69,300,000 ஆகும். | பெற வேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மேற்கூறிய நிலுவைப் பணத்தை செலுத்துமாறு பொருளாதார மத்திய நிலையத்தின் நம்பிக்கைப் பொறுப்புச் சபை தெரியப்படுத்தியிருந்தும் காணியின் உரிமை தொடர்பான சிக்கல் உருவாகியுள்ளதனால் கொடுப்பனவு செய்யப்படாதுள்ளது. எனவே, உடன்படிக்கையை மீறியமைக்கு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு நிதிக்குழு தீர்மானித்துள்ளது. |

**(உ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை**

**தகவல்களைச் சமர்ப்பிக்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 522,066,918 பெறுமதியான 05 கணக்கு விடயங்களுக்குரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாகச் சான்றுறுதி செய்வதற்கு / மெய்மையாய்வு செய்வதற்கு முடியாதிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | அது தொடர்பாக எதிர்காலத்தில் தேடிப்பார்த்து அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.5 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்தவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 48 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான விசேட ஒழுங்கு விதிகள் அதிகாரச்சட்டம் | ஹோமாகம வலயத்தில் 08 ஆண்டுகளுக்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு வீதவரிகள் அறவிடப்பட்டிருந்தன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஹோமாகம பிரதேச சபை அதிகாரப் பிரசேத்தில் 02 வீதவரி வலயங்களை அமுல்படுத்துவதுடன் அவற்றில் வேதர வலயத்தில் புதிய மதிப்பீடு 2018 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்தப்படுகின்றது. ஹோமாகம வலயத்தின் மதிப்பீடு கடைசியாக 2011 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டதுடன் புதிய மதிப்பீட்டினை மேற்கொள்வதற்காக 2017-06-16 ஆந் திகதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது. அதன் பின்னர் பல சந்தர்ப்பங்களில் மதிப்பீட்டினை மேற்கொள்ளுமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நி.பி 371(5) | ரூபா 42,600 தொகையான முற்பணங்கள் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வழங்கப்பட்ட முற்பணங்களை வழங்கப்பட்ட நிதி ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நி.பி 571 | 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 4,123,817 தொகையான வைப்புக்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வேதர உப அலுவலகத்தில் 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் வைப்பு பணம் இதுவரை வருமானத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. அந்த மீளப் பெற்றுக் கொள்ளாத வைப்பு பணத்தை 2019 ஆம் ஆண்டின் போது வருமானத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | சுற்றறிக்கை மற்றும் கடிதங்கள்<br>----------------------------- | | | |
| (i) | 1985 மார்ச் 20 ஆந் திகதிய திசெ/01 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் சுற்றறிக்கை | காணித்துண்டு அளவுகளின் விகிதத்தை மிகைத்தல் மற்றும் அத்துமீறிய நிர்மாணங்களுக்காக அறவிடப்படுகின்ற சேவைக் கட்டணங்களில் 25 சதவீதம் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பொதுச் செயற்பாடுகள் சம்பந்தமாக இனங்காணப்பட்ட செயற்திட்டத்திற்காக பெற்றுக் கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பத்தில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் / பணிப்பாளரின் முன் அங்கீகாரத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்படுவதனால் அச்சந்தர்ப்பத்தின் போது அந்த 25% பணத்தை தவிர்த்து மிகுதிப் பணத்தை மாத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கின்றேன். |
| (ii) | 1993 நவம்பர் 18 ஆந் திகதிய 15 ஆம் இலக்க நகர அபிவிருதிதி அதிகாரசபையின் திட்டமிடல் சுற்றறிக்கை | நகர அபிவிருத்தி அதிகார சபையின் கணக்கில் காணப்படுகின்ற ரூபா 22,035,964 தொகையான பணத்தை இனங்காணப்பட்ட செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஹோமாகம பண்டாரநாயக்க பிரதான நூல் நிலையக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக அப்பணத்தை ஈடுபடுத்துவதற்கு கருதப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தின் திட்ட வரைபடம் மற்றும் கட்டிட திட்டங்களின் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. அதன் பின்னர் அதற்காக அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 2012 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய LGD/05/11 VOL V ஆம் இலக்க மேல்மாகாண ஆணையாளரின் சுற்றறிக்கை | தீயணைப்புச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை ஜயவர்த்தனபுர கோட்டே மாநகர சபையுடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தீயணைப்பு உதவியை வழங்குவது சம்பந்தமாக சிறீ ஜயவர்த்தனபுர கோட்டே மாநகர சபையினால் அனுப்பிவைக்கப்பட்ட வரைபு உடன்படிக்கையானது அங்கீகாரத்திற்காக 2018-10-08 ஆந் திகதி நிதி மற்றும் கொள்கை வகுத்தல் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அந்த உடன்படிக்கையின் 7 ஆம் நிபந்தனைகளுக்கு மகா சபையின் அங்கீகாரம் கிடைக்கவில்லை. எனவே அந்த நிபந்தனைகள் திருத்தத்திற்கு உட்பட்டு சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு இணங்கி கொள்வதாக 2018-11-12 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அந்நிறுவனத்திற்கு தெரியப்படுத்தியிருந்தும் இன்று வரை பதில் கிடைத்திருக்கவில்லை. எனவே உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கின்றேன். |
| (iv) | 2012 யூலை 11 ஆந் திகதிய WP/LGD/01/2012 ஆம் இலக்க மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் (vi), (vii) மற்றும் (viii) ஆம் பிரிவுகள் | மீளாய்வாண்டின் போது 16 கட்டிட திட்ட விண்ணப்பங்களுக்கு சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிக்கள உத்தியோகத்தரின் சிபார்சினைப் பெற்று அங்கீகாரத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வெளிக்கள பரிசோதனைக்காக சமர்ப்பிக்கப்படாதிருந்த 16 விண்ணப்பங்கள் உரிய பிரதேசங்களுக்கு பகிர்ந்து ஒதுக்கப்பட்டு தொழிலநுட்ப உத்தியோகத்தருக்கு அனுப்பி வைக்கப்பட்டு திட்டமிடல் குழுவிற்காக அனுப்பி வைக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்ததுடன் வெளிக்களப் பரிசோதனை செய்து திட்டமிடல் குழுவிற்கு 04 விண்ணப்பங்கள் மாத்திரம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. |
| (v) | 2016 நவம்பர் 09 ஆந் திகதிய LGD/13/2016 ஆம் இலக்க மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | கடை வாடகை மதிப்பீடு 3 ஆண்டுகளுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், வேதர உப | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கஹதுடுவ சந்தைக் கட்டிடத் தொகுதியை தவிர்த்து ஏனைய அனைத்து கடைகளினதும் மதிப்பீடு மதிப்பீட்டுத் திணைக்களத்தால் வழங்கப்பட்டிருந்தது. |

அலுவலகத்திற்குச்
சொந்தமான
கடைகள்
சம்பந்தமாக
அவ்வாறு
செய்யப்பட்டிருக்க
வில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 134,926,783 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 122,213,348 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 74,087,800 | 83,423,094 | 64,896,543 | 38,465,793 | 53,926,700 | 71,670,580 | 76,151,369 | 29,688,575 |
| (ii) | வாடகை | 11,366,700 | 17,320,143 | 6,438,464 | 269,202 | 12,618,791 | 11,502,847 | 11,861,422 | 393,302 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 4,100,900 | 5,269,316 | 2,849.483 | - | 6,000,900 | 4,906,274 | 5,000,928 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 152,741,000 | 172,537,005 | 281,429,139 | 103,570,628 | 381,735.026 | 244,922,680 | 376,228,139 | 162,665,062 |
| | மொத்தம் | 242,296,400 | 278,549,558 | 355,613,629 | 142,305,623 | 454,281,417 | 333,002,381 | 469,241,858 | 192,746,939 |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை வீத வரி மீதியில் ஒரு ஆண்டிற்கு | சபையினால் அறவிடப்பட வேண்டிய வீத | வீதவரி நிலுவைகளை அறவிடுவதற்கு தற்பொழுது வார்ணாமம் |

| | | |
|---|---|---|
| குறைந்த ரூபா 4,919,071 தொகையும் 01 ஆண்டிற்கும் 3 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 19,591,903 தொகையும் 03 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 7,996,289 தொகையும் மற்றும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 5,890,068 மீதியும் காணப்பட்டன. | வரிகளை தாமதமின்றி அறவீடு செய்தல் வேண்டும். | வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்கு மேலதிகமாக வேதர அலுவலகம் அதிகாரப் பிரதேசத்தில் 06 நடமாடும் சேவைகள் நடாத்தப்பட்டன. எதிர்காலத்தில் 08 நடமாடும் சேவைகளை நடாத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக வீட்டுக்கு வீடு சென்று வீதவரிகளைச் சேகரிக்கும் நிகழ்ச்சித்திட்டம் ஹோமாகம அலுவலகத்தில் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. |

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 87,388,796 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 16,181,832 தொகையுமாகும். | கிடைக்க வேண்டிய வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2015 இலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை ரூபா 566,421,400 பணத்திற்கு உரிய பட்டியல்களைத் தயாரித்து மாகாண வருமானத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலே கூறப்பட்ட காலத்திற்காக முத்திரைக் கட்டண முற்பணமாக ரூபா 470,000,000 கிடைத்துள்ளது. அந்த முற்பண பணத்தில் ரூபா 62,064,110 மாகாண வருமான திணைக்களத்தால் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டு வரை அனைத்து முத்திரைக் கட்டணங்களும் அறவீடு செய்யப்பட்டுள்ளது. |

**2.2.4 சுற்றாடல் பாதுகாப்பு உத்தரவுப் பத்திரக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது 15 தொழில் முயற்சிகளுக்கு புதிய சுற்றாடல் உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப் படாதிருந்ததுடன் அதன் மூலம் ரூபா 60,000 வருமானம் சபையினால் இழக்கப்பட்டிருந்தது. | பௌதீக பரிசோதனை செய்து சுற்றாடல் பாதுகாப்பு உத்தரவுப் பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 05 தொழில் முயற்சிகளின் நிலையப் பரிசோதனைக்காக தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் விரைவாக அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒரு தொழில்முயற்சியை பரீட்சிப்பதற்காக பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 08 தொழில் முயற்சிகளின் குறைபாடுகளை கொண்டுவருவதற்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 02 தொழில் முயற்சிகளின் சுற்றாடல் |

உத்தரவுப் பத்திரங்களை வழங்குதலானது தொழில்நுட்ப செயல் முன்னேற்ற மீளாய்வுக் குழுவின் மூலம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | வல்பிட ‘‘வின்பீல்ட் காடின்’’ 4 ஆவது ஒழுங்கை ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக கல்மண் பரப்பி வீதியின் வேலையைப் பூர்த்தி செய்யாது கைவிடப்பட்டிருந்தது. | அதிகாரப் பிரசேதத்திலுள்ள பொது மக்களுக்கு வசதிகள் வழங்கப்படுதல் வேண்டும். | வல்பிட விண்பீல்ட் காடின் 4 ஆவது ஒழுங்கை - சரிவுடனான இந்த வீதி அதிக அளவில் பழுதடைந்து பிரயாணம் செய்வதற்கு சிக்கலானதாக இருந்ததனால் சில நபர்களால் பிரயாணம் செய்வதற்கு வசதியான வகையில் வீதியை தயார்ப்படுத்தி கல் பரப்பப்பட்டுள்ளது. எனினும், இதுவரை இந்த வீதியைத் திருத்தம் செய்வதற்காக பிரதேச சபையினால் அல்லது ஏனைய நிறுவனங்களால் நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை மேலும் அதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்காததுடன் அதற்காக ஒரு கோவையும் திறக்கப்பட்டிருக்கவில்லை. எனவே எந்த நிதி மூலங்களிலிருந்தும் இதற்காக கொடுப்பனவு செய்யப்படவில்லை. |
| (ii) | மீளாய்வாண்டின் போது அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 260,000 தொகையான வேலைகள் | திட்டங்கள் தயாரிக்கும் போது நிதி பௌதீக ஆளணி வளங்கள் ஆகிய மட்டுப்பாடான காரணிகள் தொடர்பாக கவனம் | பொது மக்களின் வேண்டுகோள்களைக் கவனத்தில் கொண்டு கௌரவ தலைவரின் ஆலோசனையின் பேரில் கிரவல் செயற்திட்டத்தை முழுமையாக காபட் இடப்பட வேண்டியிருந்ததனால் இரத்துச் செய்யப்பட்டது. |

| | | |
|---|---|---|
| நிறைவேற்றப்படாது கைவிடப்பட்டன. | செலுத்தப்படுதல் வேண்டும். | |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் சம்பந்தமான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபைக்கு தெளிவுபடுத்தப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அமுல்படுத்தப் படுதல் வேண்டும். | பதில்கள் வழங்கப்படவில்லை. |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஊழியர் வெற்றிடம் | | |
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் பதவியணியின் 04 வெற்றிடங்களும் ஆரம்ப மட்டத்தில் 14 வெற்றிடங்களும் காணப்பட்டன. | தாமதமின்றி ஊழியர் வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். | • இரண்டாம் மட்டத்தில் காணப்படுகின்ற 04 வெற்றிடங்களை நிரப்புவதற்காக உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு (மே.மா) கலாண்டு அறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>• ஆரம்ப மட்டத்திலுள்ள 06 வெற்றிடங்கள் தற்பொழுது பூரணப்படுத்தப்பட்டுள்ளன. மிகுதியான வெற்றிடங்களுக்காக தகைமையுள்ள விண்ணப்பதாரர்கள் முன்வராததனால் எதிர்காலத்தில் மீண்டும் விண்ணப்பங்கள் கோரப்படும். |
| (ஆ) ஊழியர் கடன் | | |
| ஓய்வு பெற்ற, சேவையை விட்டுச் சென்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற | கடனாளிகளிடமிருந்தும் பிணையாளர்களிடமிருந்தும் தாமதமின்றி | அறவிட வேண்டிய ரூபா 2,431,265 மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| நபர்களிடமிருந்து அறவிட வேண்டிய ஊழியர் கடன் ரூபா 2,431,265 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அறவீடு செய்தல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.3.1 சொத்துக்கள் ஆவணப்படுத்தப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 18 காணித் துண்டுகளின் உரித்து உறுதிகள் காணாமல் போயுள்ளன. | அனைத்து காணிகளுக்கும் உறுதிகள் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும். | எதிர்காலத்தில் உரித்துச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.3.2 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஜம்புகஸ்முல்ல ஆயுர்வேத மருந்தகம் அமைந்துள்ள காணியைச் சுற்றி வேலிகள் நிர்மாணிக்கப் படாதிருந்ததுடன் அயவலர்கள் காணியில் நிர்மாணங்கள் மற்றும் விவசாயங்கள் மேற்கொண்டு அப்பகுதி அவர்களுக்கு உரிமையாகும் வகையில் எல்லை வேலிகளை நிர்மாணித்துள்ளனர். | சபைக்குச் சொந்தமான காணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஒரு நில அளவையாளரின் மூலம் நில அளவை செய்து சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொண்டு உரிய எல்லை வேலிகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான மெதஹேன வத்த “சந்தவிமன” பொது வசதிக் காணியில் பாதுகாப்பு வேலி நிர்மாணிக்கப் | சபைக்குச் சொந்தமான காணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் | உத்தரவற்ற கட்டிடங்களை உடைத்து அகற்றுமாறும் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களை 14 நாட்களுக்குள் |

| | | | |
|---|---|---|---|
| | படாதிருந்ததுடன் எல்லைக்கு மிகவும் அருகாமையில் உத்தரவற்ற கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. | வேண்டும். | அங்கீகரித்துக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுக்காணிகளைச் சுற்றி பாதுகாப்பு வேலி அமைப்பதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் காணியை அளவீடு செய்வதற்காக நில அளவையாளரின் அறிக்கை 2018-05-03 ஆந் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| (இ) | பொது வசதிகளுக்காக சபைக்கு கிடைத்த இருபது ஏக்கர் நிவாரண பூங்கா (20 பேர்ச்சர்ஸ்) காணியும் கலவிலவத்த உபாலி நிறுவனத்திற்கு முன்னால் உள்ள பொதுக் காணியும் தனியார் தரப்பினர்களால் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் அது சம்பந்தமாக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான காணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | காணிகள் தொடர்பான உரிய ஆவணங்களைப் பரீட்சித்து தேவையான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

### 3.3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 6,020,250 மொத்த பெறுமதியான ஒரு மோட்டார் கிறேடர், ஒரு மின்பிறப்பாக்கி இயந்திரம் மற்றும் பெறுமதி கண்டுபிடிக்க முடியாத 03 சொத்துக்கள் பயன்படுத்தப்படாது / குறைவாகப் பயன்படுத்தப்பட்டு காணப்பட்டன. | வளங்களிலிருந்து உச்ச அளவு பயன்பாட்டைப் பெற்றுக் கொள்ளல் அல்லது பொருத்தமான வகையில் அகற்றுதல் வேண்டும். | மோட்டார் கிறேடரையும் மின்பிறப்பாக்கி இயந்திரத்தையும் ஏலத்தில் விற்பனை செய்து அகற்றுவதற்கும் நீர்த்தாங்கியையும் பெயர்ப்பலகையையும் இனங்காணப்பட்ட இடங்களில் பொருத்துவதற்கும் மிகுதிச் சொத்துக்களை கைதவிர்ப்புச் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளேன். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 3,248,058 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட பிடிபண புதிய நூலகத்தின் இரண்டு மாடிக் கட்டிடம் எதுவித பயன்பாடுமின்றி குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது. | வளங்களிலிருந்து உச்ச அளவு பயன்பாட்டைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். | உடல் மேம்பாட்டு நிலையம் / நூல் நிலையம் / சேவை இல்லம் என்பவற்றை எதிர்காலத்தில் தோற்றுவிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 134 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 3,895,616 மொத்த தொகையான நிதிஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்ததுடன் 54 செலவு விடயங்களுக்காக ரூபா 13,007,429 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அவற்றில் 50 சதவீதத்திற்கு மேற்பட்டவை செலவு செய்யப்பட்டிருக்கவில்லை. அந்த அளவு ரூபா 9,635,589 ஆகும். | பாதீட்டை ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படுதல் வேண்டும். | ஆண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட செலவுகளை மேற்கொள்ளாமையின் காரணமாக செலவுத் தலைப்புக்களில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. செலவுகள் மேற்கொள்ளப்படும் என்ற எதிர்பார்ப்பில் நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் எதிர்பார்த்த செலவுகளை நிறைவேற்றாமையின் அடிப்படையில் செலவுத் தலைப்புக்களில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்காக போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | உள்ளகக் கணக்காய்வு அமுல்படுத்தப்படுதல் வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |